# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

## கிளிநொச்சி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 மே 04 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2010 செப்தெம்பர் 01 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய பச்சிலைப்பள்ளி பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் கணக்குகளுடன் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிசார் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் பொறுப்புக்கள் மற்றும் வுருமானம் என சந்தர்ப்பந்கள் மற்றும் பெறுமதிகளின் கீழ் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| | நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | | | |
|---|---|---|---|---|
| | பொறுப்புக்கள் | | வருமானம் | |
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | ரூபா | | ரூபா |
| நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் கூறல்கள் | 1 | 56,000 | - | - |
| நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் கூறல்கள் | - | - | 1 | 36,000 |

### 1.3.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

கணக்குகளில் ரூபா 714,764 ஆனதோர் தொகை பெறப்பட வேண்டியதாக காட்டப்பட்டிருந்த போதிலும், இத் தொகை கணக்குப் பதிவேடுகளில் ரூபா 594,406 எனக் காட்டப்பட்டிருந்தது. வேறுபாட்டிற்கான காரணம் விளக்கப் படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 தொங்கல் கணக்கு

2010 திசெம்பர் 31 உள்ளவாறு தொங்கல் பண்பு கொண்ட கணக்கில் ரூபா 285,431 செலவு மீதி காணப்பட்டது.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 131,809 ஆக இருந்தது.

### 1.3.6 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள். விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள். விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம் | |
| (i) 132(அ) ஆம் பிரிவு | ஆண்டொன்றில் ரூபா 1,000 இற்கு மேல் மத ரீதியான மற்றும் பொது வேலைக எளிற்காக செலவிடுகையில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாது ரூபா |

9,000 ஆனதோர் தொகை உபசாரச் செலவினத்திற்காக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 19(i) ஆம் பிரிவு — அசையும் மற்றும் அசைவுறாத ஆதனங்களிற்கான பதிவேடு சபையினால் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள்

(i) இல. 104 — வாகன விபத்தொன்று தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஏற்பட்டிருந்த சேதத்தின் பெறுமதி ரூபா 4,199,534 ஆகும்.

(ii) இல. 571 — காலம் கடந்த வைப்புக்களை தீர்வுசெய்யாது சபையினால் சில்லறை வைப்புக்கள் கணக்கில் வைத்திருக்கப்பட்டிருந்தது.

(iii) இல. 685 — சபையின் வாகனத்தினை (டிரக்ரர்) திருத்தம் செய்வதற்காக கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(iv) இல. 1645 — சபையினால் வாகன சம்பவப்பதிவேடுகள் முறையாக பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) சுற்றறிக்கைகள்

i. 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை — 2010 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையினால் சுட்டிக்காட்டப்பட்ட பாவிக்க முடியாத பொருட்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை — சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்க ளிற்கான எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 இன் தேசிய கொள்வனவு வழகாட்டல்களின் 5.4.4 ஆம்பிரிவு — நிர்மாண வேலைகளின் பெறுமதியிலிருந்து பிடித்து வைத்தல் பணத்தினை அறவிடாது இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டிருந்தது.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 1,690,373 ஆக இருந்ததுடன் இதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 1,509,365 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய நிலைமைகள் கீழே தரப்பட்டுள்ளன. இருப்பினும் 2009 ஆம் ஆண்டிற்காக சபை பாதீட்டினை தயாரித்திருக் காதிருந்ததுடன் யுத்த நிலைமை காரணமாக சபை நேர்த்தியாக இயங்கியிருக்கவுமில்லை.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதிடப்பட்டவை | உள்ளபடியானவை | 31 திசெம்பரில் திரண்ட நிலுவை | பாதிடப்பட்டவை | உள்ளபடியானவை | 31 திசெம்பரில் திரண்ட நிலுவை |
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| வீதவரிகள் மற்றும் வரிகள் | 5 | - | 294 | - | - | 294 |
| குத்தகை வாடகை | 780 | 748 | | - | - | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 60 | 62 | - | - | - | - |
| ஏனைய வருமானங்கள் | 16,990 | 13,506 | 305 | - | 6,991 | 305 |

#### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

பல்வேறு நியதிச் சட்டங்களின் கீழ் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்திடமிருந்து சபையினால் பெறவேண்டிய தண்டப்பணங்கள் கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

பெறப்பட வேண்டியிருந்த முத்திரைக் கட்டணங்களை கணிப்பீடு செய்வதற்கும் தொடர்புடைய விபரங்களை பதிவாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 பிரச்சாரப் பதாகைகள் மீதான கட்டணங்கள்

சபையின் அதிகாரப்பிரதேசத்திற்குள் நிரந்தரமாக காட்சிப்படுத்தப்பட்டுள்ள 16 பிரச்சாரப் பதாகைகளிற்காக ரூபா 172,695 தொகையான கட்டணம் அறவிடப்படாதிருந்தமை 2010 நவம்பர் 02 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்பட்டது.

### 2.2.5 வீதவரி மதிப்பீடு

வித வரியினை தாபிக்கும் பொருட்டு சபையின் அதிகாரப்பிரதேசத்திற்குள் காணப்படுகின்ற பொதுமக்களிற்கும் வணிக அமைப்புக்களிற்கும் உரித்தான சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் தொடர்புடைய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன. இருப்பினும் 2009 ஆம் ஆண்டிற்காக சபை பாதீட்டினை தயாரித்திருக் காதிருந்ததுடன் யுத்த நிலைமை காரணமாக சபை நேர்த்தியாக இயங்கியிருக்கவுமில்லை.

| **செலவின வகை** | **2010** | | | **2009** | | |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** |
| | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** |
| ஆளுக்குரிய வேதனம் | 15,259 | 11,257 | 4,002 | - | 5,389 | (5,389) |
| ஏனையவைகள் | 2,194 | 1,369 | 825 | - | 92 | (92) |
| உப மொத்தம் | 17,453 | 12,626 | 4,827 | - | 5,481 | (5,481) |
| **மூலதனச் செலவு** | 9,386 | 5,711 | 3,675 | - | 1,331 | (1,331) |
| முழு மொத்தம் | 28,839 | 18,337 | 8,502 | - | 6,812 | (6,812) |

### 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியனர் எண்ணிக்கை

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| **பதவி வகை** | **அங்கீகரிக்கப்பட்டவை** | **உள்ளபடியானவை** |
|---|---|---|
| பதவிநிலை தரம் | 03 | - |
| துணைத்தரம் | 16 | 14 |
| சிற்றூழியர் | 33 | 26 |
| ஏனையோர் (சமயாசமய/தற்காலிக) | - | 10 |
| மொத்தம் | 52 | 50 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 4,999,682 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கும் மேலாக பெறவேண்டியிருந்த தொகை ரூபா 2,238,484 ஆகும்.

### 2.5.2 அறவிடப்படவேண்டிய பதவியணிக் கடன்கள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய பதவியணிக் கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 2,281,050 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கும் மேலாக பெறவேண்டியிருந்த தொகை ரூபா 1,503,600 ஆகும்.

## 2.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறையற்ற கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூபா 41,000 ஆகும். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கொடுக்கல்வாங்கல் | பெறுமதி<br>ரூபா |
|---|---|
| உதவி உள்ளூராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்ட மானியம் முற்பள்ளி சிறுவர்களிற்கு பற்பசை மற்றும் பற்தூரிகைகளை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | 41,000 |

## 2.7 செயலாற்றல்

கணக்காண்டின் தொடக்கத்தில் சபையினால் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அடைந்து கொள்வதற்கு எதிர்பார்த்த குறிக்கோல்கள் மற்றும் அதன் மீதான செயன்முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்ய முடியவில்லை.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

பிரதேச சபையில் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) நிர்வாகம்